Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW22 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : புவனேஸ்வர் |
| Father / Husband Name | : நாராயணன் |
| Village | : மதுரை |
| Taluk | : மதுரை |
| Caste | : |
| Calling | : டிரைவர் |
| Religion | : இந்து |
| Age | : 45 |

( 2, 3, 4, 5, 6 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.01.2025

முதல் விசாரணை :–

நான் மதுரை கொன்னவாயன் சாலையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கார்த்திக் என்ற பட்டறை கார்த்திக் தெரியாது. இறந்து போன செல்லப்பாண்டியை தெரியாது. போலீசார் என்னிடம் கொலை வழக்கில் சாட்சியாக போடுவதாக சொன்னார். வேறு எதுவும் தெரியாது.

( அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது. )

அ.த.கு.வி

கடந்த 18.12.2017 ம் தேதி காலையில் கொன்னவாயன் சாலையில் செல்வம் கறிக்கடை பக்கம் இருந்த போது எதிரிகள் ரஜினி, மகேந்திரன் , ஒரு 17 வயது பையனை கொண்டு வந்து விட்டுவிட்டு குணா அண்ணன் பார்த்துக் சொன்னார் என்று சொல்லிவிட்டு போனார்கள். பின்பு குணாவும், பட்டறை கார்த்திக்கும் வந்தார்கள் என்றும், கார்த்திக் தன்னை 17.12.2017 ம் தேதி ஆறு முச்சந்தியில் வைத்து அடித்தவர்களின் இவரும் ஒருவர் என்றும் இவரை வைத்து மற்றவர்களை தேட வேண்டும் என்று சொன்னார் என்றும், நான் அவனை விடுங்கடா என்று சத்தம் போட்டேன் என்றும், அந்த பையனிடம் பெயர் என்ன கேட்ட போது சிம்மக்கல் அனுமன் படித்துறை SLNB சந்துவில் வசிக்கும் செல்லப்பாண்டியன் என்றும் சொன்னார் என்றும், அவனுக்கு சாப்பாடு வாங்கி கொடுத்து வைத்திருந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த பட்டறை கார்த்திக்கும், குணாவும் ஒரு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு போனார்கள் என்றும், அவரோடு மகேந்திரன், ரஜினி, மணிகண்டசேதுபதி ஆகியோர்கள் ஆட்டோவில் சென்றார்கள் என்றும், மேலும் அவர்களுடன் தினேஷ்குமார்

என்ற பையன் இருந்தார் என்றும், சின்ன பையனாக இருக்கிறான் ஒன்றும் செய்துவிடாதீர்கள் என்று சொன்னதாகவும், அப்போது அவனை நான் கடைசியாக பார்த்தேன் என்றும், அன்னைக்கு ராத்திரி பட்டறை கார்த்திக் போன் செய்து செல்லப்பாண்டி என்பவரை நரிக்குடி அருகே உள்ள இருஞ்சிறை கண்மாயிக்குள் வைத்து குத்தி கொலை செய்துவிட்டதாகவும், தனது மனைவியை பாதுகாப்பாக வீட்டுக்கு கூட்டிவிட்டு போய் வைக்கச் சொன்னதாகவும், சின்னப் பையலை இப்படி கொன்றுவிட்டீர்களே இனிமேல் என்னிடம் பேசவேண்டாம் என்று அழைப்பை துண்டித்துவிட்டதாகவும், மறுநாள் நியூஸ் பேப்பரில் செய்தி வெளியாக மதுரை திலகர்திடல் காவல்நிலையம் போனேன் என்றும், அங்கு விசாரித்த போது செல்லப்பாண்டியன் குடும்பத்தார் நரிக்குடி சென்றதாகவும், அவனை கொன்றது பட்டறை கார்த்திக் மற்றும் அவரை சார்ந்தவர்கள் என்றும் அவர்கள் போலீஸ் தேடிக் கொண்டியிருப்பதாகவும், மனநிலை சரியில்லாததால் வெளியூர் சென்றுவிட்டேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் நண்பர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.